## களத்திலும் இல்லை; மக்கள் மனதிலும் இல்லை என்றாலும் 'நானும் ரவுடிதான்' என்பது போல

# S.I.R.க்கு பழனிசாமி வக்காலத்து வாங்குவதில் ஆச்சரியமில்லை!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, நவ. 12 –

"எடப்பாடி பழனிசாமி களத்திலும் இல்லை; மக்கள் மனதிலும் இல்லை என்றாலும் 'நானும் ரவுடிதான்' என்பது போல 'என்னை ஏன் விமர்சிக்கவில்லை?' என்று wanted ஆக வண்டியில் ஏறுகிறார் பச்சைப் பொய் பழனிசாமி." என்றும் "ஆட்சியில் இருக்கும்போது டெல்லி பிக்பாஸ்களுக்குப் பயந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்தது போலத் தமிழர்களின் வாக்குரிமையை அடகு வைக்க துணிந்து விட்ட பழனிசாமி, SIRக்கு வக்காலத்து வாங்குவது ஆச்சரியமில்லை!" என்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"நானும் ரவுடிய்யா.. இந்த ஏரியாவுல ரவுடினு ஃபார்ம் ஆயிட்டேன்ய்யா" என வடிவேலுவின் காமெடியை நினைவுபடுத்துவது போல எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி நடந்து கொள்கிறார். எடப்பாடி பழனிசாமி களத்திலும் இல்லை; மக்கள் மனதிலும் இல்லை என்ற போதும் 'நானும் ரவுடிதான்' என்பது போல 'நானும் எதிர்க் கட்சித் தலைவர்தான்' என்று wanted ஆக வண்டியில் ஏறுகிறார் பச்சைப் பொய் பழனிசாமி.

சசிகலா, பன்னீர்செல்வம், தினகரன், செங்கோட்டையன் எனத் தொடர்ந்து பழனிசாமிக்கு எதிராகப் பேசுவது தினமும் ஊடகத்தில் வந்து கொண்டிருக்கிறது. அதனால், பதற்றமாகி தன் இருப்பையும் காட்டிக் கொள்ள ஊடகத்தில் எதையாவது உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

**அரசியல் முதிர்ச்சி பற்றி பேசுவதா?**

அரசியல் முதிர்ச்சியைப் பற்றி எல்லாம் யார் பேசுவது? அதிமுக கட்சியின் பெயரில் உள்ள 'திராவிடம்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது என்று சொன்ன 'மங்குனி'தானே நீங்கள். "படுத்தே விட்டான் ஐயா..." என்ற ரீதியில் பாஜகவுக்காக பழனிசாமி நடத்திய அடிமை ஆட்சியால் நீட் முதல் மின்சாரம் வரை தமிழ்நாட்டின் உரிமைகளை இழந்து தவித்தோம். இப்போது தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமைக்கும் அச்சுறுத்தல் தரும் பாஜகவின் SIRயை கண்டிக்க திராணியில்லாமல் வக்காலத்து வாங்கி கொண்டிருக்கிறார்.



SIR வழியாகத் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கப் பாசிச பாஜகவும் அடிமை அதிமுகவும் போட்ட சதிக்கு எதிராக திமுக எடுத்துவரும் உறுதிமிக்க நடவடிக்கைகள் பழனிசாமியை ஆட்டங்காண வைத்திருக்கிறது. மக்களைச் சந்தித்துத் தேர்தலில் வெற்றி பெற முடியாத கோழைகள், சிறுபான்மை யினர், பெண்கள், பட்டியலினத்தவர்களின் வாக்குரிமையை பீகாரில் பறித்தது போல், தமிழ்நாட்டிலும் பறித்துவிடலாம் எனப் போட்ட சதியை எதிர்த்து களப்போரட்டமும், சட்டப் போராட்டமும் நடத்திக் கொண்டிருக்கிறது திமுக.

**பழனிசாமியின் பகல் கனவு பலிக்காது!**

ஆட்சியில் இருக்கும் போது டெல்லி பிக்பாஸ்களுக்குப் பயந்து தமிழ்நாட்டின் உரிமைகளை அடகுவைத்தது போல இப்போது தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை அடகு வைக்கத் துணிந்துவிட்ட பழனிசாமி SIRக்கு வக்காலத்து வாங்குவது ஆச்சரியமில்லை. முஸ்லிம்களைப் பாதிக்கும் வகையில் மோடி அரசு கொண்டு வந்த CAA சட்டத்தை ஆதரித்து விட்டு முஸ்லிம்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை எனப் பச்சைப் பொய் சொன்னவர் தான் பழனிசாமி. அந்த CAA சட்டத்தை SIR வழியாக அமல்படுத்தத் துடிக்கும் பாஜகவுக்குத் துணை போகும் எடப்பாடி பழனிசாமிக்கு தேர்தலில் பாடம் புகுத்துவார்கள். எத்தனை தில்லு முல்லுகளைச் செய்தாலும் சரி எத்தனைக் குறுக்கு வழிகளில் வந்தாலும் சரி தமிழ்நாட்டில் பாஜகவின் எந்தச் சித்து விளையாட்டும் வெற்றி பெறாது. பழனிசாமியின் பகல் கனவும் பலிக்காது.

நேற்று கட்சி தொடங்கியவர்கள் கூட 'திமுகவுக்கும் எங்களுக்கும்தான் போட்டி' என்று பேசுவதால் பழனிசாமிக்கு பதற்றம் ஏற்பட்டு விட்டது போல. முதலமைச்சரைப் பார்த்து, பாஜகவை விமர்சிக்காமல் எங்களையும் கொஞ்சம் விமர்சியுங்கள் என்று கெஞ்சுகிறார்.

**பா.ஜ.க. வுக்கு முட்டு கொடுக்கிறார்!**

தேர்தல் ஆணையம் வழக்கமாக மேற்கொள்ளும் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கும் தற்போது மேற்கொண்டு இருக்கும் SIRக்கும் வேறுபாடு தெரியாத அப்பாவி போல நடித்து மக்களை ஏய்க்க நினைக்கிறார் பழனிசாமி. SIR படிவத்தில் எதை நிரப்புவது எதை விடுவது, முந்தைய SIR க்கு பிந்தைய வாக்காளர் பட்டியல் விவரங்களைக் கண்டடைவதில் குழப்பம் எனப் பல்வேறு குளறுபடிகளோடு அவசர அவசரமாக இப்பணியை மேற்கொள்ளத் தேர்தல் ஆணையத்தை நிர்ப்பந்திக்கும் ஒன்றிய பாஜக அரசின் நோக்கம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. அது தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைத் திருடுவது மட்டுமே.

பணமதிப்பிழப்பு தொடங்கி தற்போது SIR வரை அனைத்திலும் அப்பாவி மக்களை அல்லல்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாக்கி அதைக் கண்டு ஆனந்தப்படும் பாஜகவையும் அதன் அடிமைகளையும் என்றும் தமிழ்நாடு ஏற்காது. திமுக எப்போதும் சாமானிய மக்களுக்குத் தோழனாகத் துணை நிற்கும் இயக்கம். SIRக்கு எதிராக ஒரு பக்கம் சட்டப்போராட்டத்தையும் மறுபக்கம் மக்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறது திமுக. ஆனால், அதிமுக அந்த SIRக்கு ஒரு துரும்பைக் கூட கிள்ளி போடாத பழனிசாமி பாஜகவிற்காக முட்டுக்கொடுக்க மட்டும் ஓடோடி வருகிறார்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## புதுடெல்லியில் பயங்கரம்:

# கார் குண்டு வெடித்து 13 பேர் பலி; மக்கள் அலறல்!

## 24 பேர் காயம் — தீவிர சிகிச்சை!

புதுடெல்லி, நவ.12 –

டெல்லியில் கார் குண்டு வெடிப்பில் 13 பேர் பலியாகியுள்ளனர். பலர் காயமுற்றுள்ளனர். பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. பயங்கரவாதிகளின் சதிச்செயலா? என்று விசாரணை நடத்தி வருகின்றனர். இதனையடுத்து நாடு முழுவதும் தமிழ்நாடு, டெல்லி, மும்பை, உ.பி., காஷ்மீர், தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் உஷார் நிலை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது.

குஜராத்தின் ஆமதாபாத் நகரில் பயங்கரவாத ஒழிப்பு படையினர் நேற்று முன்தினம் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். இதில் சந்தேகத்திற்குரிய வகையிலான 3 பேர் அதலாஜ் சுங்க சாவடி அருகே கைது செய்யப்பட்டனர். அவர்கள் அகமது மொஹியுதீன், ஆசாத் சுலேமான் ஷேக் மற்றும் முகமது சுஹேல் சலீம் கான் என அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 2 கிளாக் ரக கைத்துப்பாக்கிகள், பெரட்டா ரக கைத்துப்பாக்கி ஒன்று, 30 தோட்டாக்கள் மற்றும் 4 லிட்டர் ஆமணக்கு எண்ணெய் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் 3 பேரும் ஆயுத விநியோகம் செய்தபோது பிடிபட்டனர். நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் தாக்குதல் நடத்த அவர்கள் சதி திட்டம் தீட்டியது விசாரணையில் தெரிய வந்தது.

இதுதவிர, இந்திய பகுதிகளை பயங்கரவாதி ஷாம்ஷெர் தலைமையிலான லஷ்கர்–இ–தொய்பா குழு, டிரோன்கள் உதவியுடன் வான்வழியே ஆய்வு செய்துள்ளது. எல்லை கட்டுப்பாட்டு கோட்டு பகுதியில், தாக்குதலுக்கு சாத்தியப்பட்ட இடைவெளி பகுதிகளை அடையாளம் காணுதலும் நடந்துள்ளன. இதனால், வருகிற வாரங்களில் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியங்கள் உள்ளன என 5 நாட்களுக்கு முன் உளவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சூழலில், நாடு முழுவதும் பயங்கரவாத தாக்குதல்களை நடத்த சதி திட்டம் தீட்டிய 3 பேர் குஜராத்தில் கைது செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

**கார் குண்டு வெடிப்பு!**

இந்த சூழலில், டெல்லி செங்கோட்டை அருகே நேற்று முன்தினம் இரவு சுமார் 7 மணியளவில் மெட்ரோ ரெயில் நிலையம் அருகே குண்டு வெடிப்பில் கார் ஒன்று திடீரென தீப்பிடித்து, எரிந்தது. இதன் பின்னர் அந்த கார் வெடித்து சிதறியது. இந்த பகுதி, மக்கள் அதிக அளவில் வந்து செல்லும் பகுதியாகவும் உள்ளது. சாந்தினி சவுக் சந்தை உள்பட பல முக்கிய பகுதிகள் இதனருகே அமைந்துள்ளன. இந்த சூழலில் கார் வெடித்து சிதறிய பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அந்த இடத்தில் கூடியிருந்த மக்கள் கார் வெடித்ததும் அலறியடித்து தப்பியோடினர்.

இதுதொடர்பாக தீயணைப்பு துறையினருக்கும், போலீசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. எதற்காக கார் தீப்பிடித்தது. கார் வெடிக்கும் அளவுக்கு என்ன நடந்தது? யாருடைய கார் என்றும், எதற்காக இந்த பகுதிக்கு கார் கொண்டு வரப்பட்டது என்பது பற்றியும் விசாரி க்கப்பட்டு வருகிறது. டெல்லியில் மாலை வேளையில் அலுவலகங்கள் மற்றும் கட்டிடங்களில் வேலை முடிந்து பலர் செல்ல கூடிய நேரத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது. இதனால், சதி வேலையாக இருக்க கூடும் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இதுதொடர்பாகவும் விசாரணை நடந்து வருகிறது. தீயை கட்டுப்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

**பல வாகனங்களில் தீப்பற்றியது!**

7 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ பகுதிக்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. வேன், ஆட்டோ மற்றும் கார் என 8–க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் சிக்கி சேதமடைந்து உள்ளன. இந்த சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என மருத்துவமனை நிர்வாகம் உறுதிப்படுத்தி உள்ளது. இதுதவிர 24 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. சம்பவ இடத்தில் டெல்லி காவல் துறை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். டெல்லி விமான நிலையம், ரெயில் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளது. இந்த சம்பவத்தில் பயங்கரவாதிகளின் சதிச்செயல் எதுவும் நடந்திருக்கிறதா? என்ற கோணத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக சிக்கிய 2 பேரிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா காயமடைந்தவர்களை நேரில் சென்று விசாரித்தார். மேலும் அமித்ஷாவிடம் பிரதமர் மோடி விவரங்களை கேட்டறிந்து உள்ளார். நாடு முழுவதும் தமிழகம், டெல்லி, மும்பை, உ.பி., காஷ்மீர், உள்ளிட்ட மாநிலங்களில் உஷார் நிலை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது.

## புதுடெல்லியில் செங்கோட்டை அருகே கார் வெடிப்புச் சம்பவம்!

# சம்பவ இடத்தில் இருந்து வரும் காட்சிகளைக் கண்டு மனமுடைந்தேன்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேதனை!

**சென்னை, நவ.12 –**

**"புதுடெல்லி கார் வெடிப்புச் சம்பவத்தில் இருந்து வரும் காட்சிகளைக் கண்டு மனமுடைந்தேன்" என நேற்று முன்தினம் இரவு விடுத்த வலை தளப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

டெல்லியில் செங்கோட்டை அருகே கார் வெடிப்புச் சம்பவத்தில் அப்பாவி உயிர்கள் பல பலியாகியுள்ளது அதிர்ச்சியும் மிகுந்த வேதனையும் அளிக்கிறது. சம்பவ இடத்தில் இருந்து வரும் காட்சிகளைக் கண்டு மனமுடைந்தேன்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோர் மனவுறுதியோடு விரைந்து நலம் பெற விழைகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், பல்லடம் அரசு மருத்துவமனை வாளகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பத்திரிகையாளர் நல நிதியம் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்ட ஜனசக்தி செய்தியாளர் நாகராஜ் க்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக மருத்துவ நிதியுதவி ரூ.2.50 இலட்சத்திக்கான காசோலையை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே, இணை இயக்குநர் மருத்துவப்பணிகள் மரு.மீரா, பல்லடம் நகர்மன்றத்தலைவர் திருமதி கவிதாமணி ராஜேந்திரகுமார் ஆகியோர் உள்ளனர்.

## அலிஷேக் மீரான் சிறப்புரை!

# மும்பையில் முப்பெரும் விழா - நலத்திட்ட உதவிகள்!

## மும்பை புறநகர் பிவாண்டி கிளை சார்பில் – புதிய கிளை நிர்வாகிகள் அறிமுக விழா!

*சென்னை, நவ.12 -*

*மும்பை புறநகர் மாநில தி.மு.க. பிவாண்டி கிளை சார்பில் முப்பெரும் விழா மற்றும் புதிய கிளை நிர்வாகிகள் அறிமுக விழா 16.11.2025 ஞாயிறு அன்று மாலை சரியாக 6.00 மணியளவில் பிவாண்டியில் உள்ள சில்கோ ஹவுஸ் கீழ் தளத்தில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வில் - மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிஷேக் மீரான் சிறப்புரையாற்றுகிறார்.*

*பிவாண்டி கிளையின் செயலாளர் எம்.ஜாகிர் உசேன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்புக் குழு உறுப்பினர் மெஹபூப் பாஷா சேக் வரவேற்புரை ஆற்ற, புறநகர் திராவிட முன்னேற்றக் கழக பொறுப்புக் குழு உறுப்பினர் முனைவர் வதிலை பிரதாபன் துவக்க உரையாற்றுகிறார்.*

*நிகழ்வினை திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி அமைப்பாளர் ந. வசந்தகுமார் தொகுத்து வழங்குகிறார்.*

**மூவேந்தர்கள் படத்திறப்பு**

*தந்தை பெரியார் படத்தினை பொறுப்புக் குழு உறுப்பினர் ஜெயினுலாபுதீனும், பேரறிஞர் அண்ணா படத்தினை பீவாண்டி கிளை அவைத் தலைவர் சான் பாஷாவும், முத்தமிழறி ஞர் கலைஞர் படத்தை பிவாண்டி கிளைத் துணைச் செயலாளர் கன்னி முத்துவும் திறந்து வைக்கின்றனர்.*

**முன்னிலை**

*புறநகர் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி. கிருஷ்ணன், அ.இளங்கோ, வே. சதானந்தன், எஸ்.பி. குமரேசன், வீரை சோ பாபு, சா.சி.தாசன், மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ. கணேசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர், அ.ரவிச்சந்திரன் மற்றும் பிவாண்டி கிளைக் கழக மேலமைப்பு பிரதிநிதி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

**நலத்திட்ட உதவிகள்**

*பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜேம்ஸ் தேவதாசன், சிவக்குமார் சுந்த ர் ராஜ், பிவாண்டி கிளை பொருளாளர் எம்.எஸ். முஸ்தாக் அலி மற்றும் பிவாண்டி கிளை துணைச் செயலாளர் பேராசிரியர் சம்பத் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.*

**சிறப்பு அழைப்பாளர்கள்**

*முகமது அலி, ராமலிங்கம், ஷாகுல் ஹமீது, ஜெயக்குமார், சபீர் ஷேக், ஜாகிர் ஹசன், கோவிந்தன், சபி, ஜெயராம், வி வி பெருமாள், முத்துக்குமார், கு. தர்மலிங்கம், க. ஜீவானந்தம். தானே திமுக ஜாகிர் உசேன், நெல்லை பைந்தமிழ், ஆர் பாலமுருகன், எஸ் பெருமாள், தமிழின நேசன், மா. கதிரவன், நம்பி, முத்தமிழ் தண்டபாணி, ராஜேந்திரன், மூர்த்தி, பழனி, அப்துல் லத்திப், கி. வீரமணி, பா. உதயகுமார், பொய்சர் மூர்த்தி,*

*உ.அமரன், ரஜகை நிலவன், சி.சுடலை யாண்டி, அ.வேலையா, ரமேஷ்.*

*அ. அருணாச்சலம், ஜஸ்டின், ஆழ்வார், பொன்மணி, தில்லை, திவா வேல் முருகன், எம். இ. முத்து, குலசேகரன், ஆறுமுகம், மாரி, சங்கர சுப்பு, ஜி. பசுபதிநாதன், டி செல்லத்துரை, பாண்டு, மாடசாமி, ஐயப்பன், சரவணன், பரமசிவம், விஜயகுமார், அம்பர்நாத் ராமு, உதயசூரியன், ரமேஷ் மற்றும் பலர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொள்கின்றனர்.*

*அனைத்துக் கழக உணர்வாளர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கு மாறு விழாக் குழுவினர் அன்புடன் அழைக்கின்றார்கள்.*



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளராக பணியாற்றி வந்த பி.கோவிந்தன் அவர்கள் கடந்த சில தினங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இயற்கை எய்தினார். இதனை அடுத்து அவரது உடலுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ, ஆகியோர் அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாநில சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றிய செயலாளர் தனசேகரன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, நாகரசம்பட்டி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக முதியோர் மன மகிழ் வள மையம் அன்புச்சோலை திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாநகராட்சி லட்சுமி கார்டன் சேரன் நகர் அன்புச்சோலை இல்லத்தில் முதியவர்கள் மகிழ்ச்சியுடன் விளையாடுவதை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டார். நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.